<u>**கம்பம் நகராட்சி**</u>

**2020–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் (11.12.2020) ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் அவசரக் கூட்டம்.

<u>**கூட்டப் பொருட்கள்**</u>

**1.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு D, பிளாக்–**25**, நகரளவை எண். **8/42** –இல் திரு. உமர்பாரூக் என்பவரிடம் பெறப்பட்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி மனுவினை உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை, தேனி அவர்கள் பரிசீலனை செய்து தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்தில் உள்ள சாலைகளின் நீளம் மற்றும் பரப்பளவு குறிப்பிடப்பட்டதினையும், நான்கு பக்க எல்லைகள் குறிப்பிட்டு மூலை, முடுக்குகள் அளவுகளை பத்திரப்பதிவு செய்து ஒப்படைப்பு செய்திட உத்திரவிடப்பட்டதின்படி, மேற்படி இடத்தின் உரிமையாளர் திரு.எஸ். உமர்பாரூக் பத்திர பதிவு எண்.4751, நாள். 30.11.2020–இன்படி கீழ்கண்ட விவரங்களின்படி இந்நகராட்சி ஆணையர் பெயருக்கு பத்திரப்பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளார்.

| | |
|---|---|
| | சாலை எண்.1–க்கு கிழமேல் வடபுறம் 36.55 மீ, தென்புறம் 37.20 மீ, தென்வடல் கீழ் மற்றும் மேல்புறம் 7.20 மீ மொத்த பரப்பளவு 265.50 சதுர மீட்டர் ஆகும். |
| 2) | சாலை எண்.2–க்கு கிழமேல் வடபுறம் 40.30 மீ, தென்புறம் 41.0 மீ, தென்வடல் மேல்புறம் மற்றும் கீழ்புறம் 7.20 மீ மொத்த பரப்பளவு 292.68 சதுர மீட்டர் ஆகும். |
| 3) | சாலை எண்.3–க்கு கிழமேல் வடபுறம் 44.10 மீ, தென்புறம் 44.75 மீ, தென்வடல் மேல்புறம் மற்றும் கீழ்புறம் 7.20 மீ மொத்த பரப்பளவு 319.86 சதுர மீட்டர் ஆகும். |
| 4) | சாலை எண்.4–க்கு கிழமேல் வடபுறம் மற்றும் தென்புறம் 1.0 மீ, தென்வடல் கீழ்புறம் மற்றும் மேல்புறம் 163.25 ச.மீ மொத்த பரப்பளவு 1049.16 சதுர மீட்டர் ஆகும். |

மேலும், அரசாணை எண்.14, விதி 47–இன்படி மனைப்பிரிவு சாலைகள் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் தவிர்த்து உள்ளாட்சி உபயோகத்திற்கு 27.45 (0.51%) சதுர மீட்டர் மற்றும் TANGEDCO உபயோகத்திற்கு 27.45 சமீ பரப்பளவுள்ள இடத்தினையும், சாலைகள் மற்றும் மூலை, முடுக்குகள் 7 எண்ணத்திற்கு 7.87 சதுர மீட்டர் பரப்பளவுள்ள இடத்தினையும் தானப்பத்திர பதிவு செய்து வழங்கியுள்ளார். அதன்படி, உத்தேச வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட சாலைகளை தார்ச்சாலை தன்மை கொண்டும் அச்சாலைகளுக்கு இருபுறமும் கழிவுநீர் வடிகால் தேவையான பாலங்கள் அமைத்து அதன் புகைப்பட நகலினை இணைத்து ஒப்படைப்பு செய்துள்ளார் என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்: 2143/2020/எப்1)**

**2.** இந்நகராட்சி ஈப்பு எண். T.N. **60 Q 2112** வாகனத்தின் முன்பகுதி கண்ணாடி பழுது ஏற்பட்டு உடைந்துவிட்டதால் புதியதாக கண்ணாடி பொருத்துவது அவசியமாக உள்ளது. எனவே, பழுதடைந்த கண்ணாடி மாற்றுவதற்கான தொகை ரூ. **4,950/–**ஐ பொதுநிதியிலிருந்து செலவு செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி ஸ்ரீ முருகன் ஆட்டோ எலக்ட்ரிகல்ஸ், கம்பம் நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**3.** இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு பயன்பாட்டில் உள்ள TATA ACE – TN60 AW 8347, TN60 AW 8375, TN60 AW 8353 வாகனங்களுக்கு புதியதாக **12** எண்ணம் டயர்கள் சப்ளை செய்து பொருத்திடும் பணிகள் செய்திட உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | ஸ்ரீ முருகன் ஆட்டோ எலக்ட்ரிகல்,<br>நகராட்சி எதிர்புறம், கம்பம் | **ரூ. 47,820/–** |
| 2. | ஸ்ரீ சாய்ராம் ஸ்பிரே பெயிண்டிங் ஒர்க்ஸ்,<br>சிஎம்எஸ் நகர், கம்பம். | **ரூ. 49,560/–** |
| 3. | உரிமையாளர்,<br>பரமசிவம் ஆட்டோ கேரேஜ், வ.உ.சி. திடல், கம்பம் | **ரூ. 49,701/–** |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக்குறிப்பு..** | வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ முருகன் ஆட்டோ எலக்ட்ரிகல், கம்பம் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். |

**4.** தனி அலுவலரின் முன் அனுமதியின்படி, கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் TN 60 T 4504 டம்பர் பிளேசர் லாரிக்கு **29.11.2020** உடன் தகுதிச்சான்று முடிவடைவதால் **03.12.2020**–ஆம் நாள் வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு பி.முருகன்<br>ஸ்ரீ முருகன் ஆட்டோ எலக்ட்ரிகல்,<br>நகராட்சி எதிர்புறம், கம்பம் | ரூ. 1,49,900/– |
| 2. | திரு எஸ்.முருகன்<br>ஸ்ரீ சாய்ராம் ஸ்பிரே பெயிண்டிங் ஒர்க்ஸ்,<br>சிஎம்எஸ் நகர்,<br>கம்பம். | ரூ. 1,55,000/– |

| | |
|---|---|
| **அலுவலகக்குறிப்பு..** | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு பி.முருகன், ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிகல், கம்பம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண்.2907 /2020/எச்1)** |

**5.** கம்பம் நகராட்சி பகுதியில் தினந்தோறும் **18** TPD குப்பை கழிவுகள் சேகரிக்கப்படுகிறது. இவற்றில் **6** MT மக்கும் கழிவுகள் ஆங்கூர்பாளையம் ரோட்டில் அமைந்துள்ள நுண்உரம் செயலாக்க மையத்திலும் (MCC) நந்தகோபால்சாமி நகர் நுண் ஊரம் செயலாக்க மையத்திலும்(MCC) மற்றும் கம்பம் to கூடலூர் ரோட்டில் அமைந்துள்ள நகராட்சி உரக்கிடங்கில் Windrows முறையில் உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது மற்றும் இதர கழிவுகள் நகராட்சி வாகனம் மூலம் Biomining செய்யப்படாத இடத்தில் நகராட்சி உரக்கிடங்கில் மேற்புறத்தில் ஒரு சிறிய இடத்தில் கொட்டப்பட்டு வருவதால் மலைபோல் தேங்கி மேடாக உள்ளது. எனவே மேடாக உள்ள குப்பை கழிவுகளை Chain Bulldozer மூலம் ஒதுக்கி சமப்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்கு **03.12.2020** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும்,அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரரின் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் ரூ. | |
|---|---|---|---|
| 1. | திரு ஜி.நாகராஜன்,<br>தமிழ் எர்த் மூவர்ஸ்,<br>சின்னமனூர் | ஜெயின் புல்டோசர் (ஒரு மணி நேரத்திற்கு) | **1360/–** |
| | | ஓட்டுநர்படி (ஒரு நாளைக்கு) | **700/–** |
| | | லாரி வாடகை (ஒரு முறைக்கு) | **2000/–** |
| 2. | திரு சுரேஷ்<br>PR Bricks & Earth Movers<br>கம்பம். | ஜெயின் புல்டோசர் (ஒரு மணி நேரத்திற்கு) | **1500/–** |
| | | ஓட்டுநர்படி (ஒரு நாளைக்கு) | **800/–** |
| | | லாரி வாடகை (ஒரு முறைக்கு) | **4000/–** |

| | |
|---|---|
| **அலுவலகக்குறிப்பு..** | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு ஜி.நாகராஜன், தமிழ் எர்த் மூவர்ஸ், சின்னமனூர் கொடுத்துள்ள குறைந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம் |

**(ந.க.எண்.2912 /2020/எச்1)**

6 கம்பம் நகராட்சிக்கு சொந்தமான கம்பம்– குமுளி சாலையில் அமைந்துள்ள உரக்கிடங்கில் சேரமாகியுள்ள குப்பைகளை பயோமைனிங் முறையில் அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. அவ்விடத்தில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் 2018–19ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை விதிகளுக்குட்பட்டு ரூ. 410.00 இலட்சம் மதிப்பீட்டில் கசடு கழிவு சுத்திகரிப்பு மையம் அமைக்கும் பணிகள் தடையின்றி நடைபெற அவ்விடத்தில் உள்ள குப்பைகளை உடன் அப்புறப்படுத்தவேண்டியுள்ளது. மேலும், மேற்படி திட்டப்பணியினை விரைந்து முடிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 20.11.2020 ஆய்வு கூட்ட அறிவுரையின்படி, மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி குப்பைகளை உடன் அப்புறப்படுத்தி அருகில் உள்ள இடத்தில் மாற்றுவதற்கு வாடகைக்கு ஜே.சி.பி மற்றும் கிட்டாட்சி வாகனங்களை பயன்படுத்தி அப்புறப்படுத்திட ஆகும் உத்தேச செலவின தொகை ரூ. 9.00 இலட்சத்திற்கும், மேற்படி செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2020/இ1)

7 இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் லோயர்கேம்ப் குடிநீர் திட்டத்தில் லோயர்கேம்ப் முதல் கம்பம் நகர் வரை **18** கிலோ மீட்டர் நீளம் உள்ள **16** இஞ்ச் D1 தன்னோட்ட மெயின்குழாயில் உடைப்பு மற்றும் ஏர் வால்வுகளில் பழுது ஏற்பட்டு குடிநீர் வீணாவதால் நகரில் விநியோகம் பாதிக்கப்படுகிறது. இதனை இரண்டு தினங்கள் குடிநீர் பம்பிங் செய்வதை நிறுத்தி, குழாய் உடைப்புகளை சரிசெய்வதற்கு ஆகும் செலவினம் ரூ.**275000/–**க்கும், தனி அலுவலரின் முன் அனுமதியின்படி மேற்படி செலவினம் மேற்கொள்ள அனுமதியும் மற்றும் **18.11.2020** –ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளதை மன்றத்தின் பரிசீலனைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி விவரம் | மதிப்பீட்டை விட | |
|---|---|---|---|
| | | சதவீதம் குறைவு | சதவீதம் கூடுதல் |
| 1 | திரு எல்.இராஜேந்திரன் | **0.08** | –– |
| 2 | திரு வி.கிருஷ்ணன் | –– | **0.60** |

அலுவலகக் குறிப்பு :– வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.08** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு எல்.இராஜேந்திரன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

8 இந்நகராட்சி அரசாணை(நிலை) எண்.**27** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (கு.தி.II ) துறை நாள்.**21.03.2012–**இன்படி, ரூ.**18.80** கோடி மதிப்பீட்டில் லோயர் கேம்ப் குடிநீர் திட்டம், குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் செயல்படுத்தி, பணி முடித்து நகராட்சி வசம் **17.04.2020–**ஆம் தேதி ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்படி திட்டத்தை நகராட்சி மூலம் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாததால் வருடாந்திர ஒப்பந்த அடிப்படையில் இயக்கம் மற்றும் பராமரிப்பு செய்திட ரூ.**41.00** இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்ற தீர்மான எண்.**2075** நாள்.**31.08.2020–**ஆம் தேதிய தீர்மானத்தில் மன்ற அனுமதியும், அதனை தொடர்ந்து சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் தலைமை பொறியாளர் அவர்களின் **22.10.2020–**ன் படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின் பேரில், மேற்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின்படி, மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வலைதளம் வழியாக ( Online) ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை.

மேலும் நேரடியாக (Off line ) கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு **26.11.2020–**ஆம் தேதிய ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் **26.11.2020** அன்று தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி மட்டும் (Technical Bid) திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்டஇரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் திட்டப்பணி மேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது . அதன் விபரம்.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1. | திரு L.ராஜேந்திரன், ஒப்பந்ததாரர், கம்பம்,தேனி மாவட்டம் |
| 2. | திரு V.கிருஷ்ணன், ஒப்பந்ததாரர், கம்பம்,தேனி மாவட்டம் |

**தொ**ழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமூனா (Price Bid) 27.11.2020 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கோரப்பட்ட விலைவிகித விபரம் கீழ்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு L.ராஜேந்திரன், ஒப்பந்ததாரர், கம்பம்,தேனி மாவட்டம் | மதிப்பீட்டு தொகைக்கு (–) **0.028**% குறைவு |
| 2 | திரு V.கிருஷ்ணன், ஒப்பந்ததாரர், கம்பம்,தேனி மாவட்டம் | மதிப்பீட்டு தொகைக்கு (+) **–0.002**% அதிகம் |

| | | |
|---|---|---|
| | மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.028% குறைவாக வழங்கிய திரு L.இராஜேந்திரன்,ஒப்பந்ததாரர்,கம்பம், தேனி மாவட்டம் ஒப்பந்ததாரரிடமிருந்து விலைக்குறைப்பு செய்ய கோரியதில், ஒப்பந்ததாரர் மூலப்பொருட்களின் விலை ஏற்றத்தினாலும் பணியாளர்களின் கூடுதல் சம்பள ஏற்றத்தினாலும் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள 0.028% விலை விகிதத்தினை குறைக்க இயலாது என 27.11.2020–ஆம் தேதியில் கடிதம் வழங்கியுள்ளார் என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. | |
| | அலுவலகக் குறிப்பு :– | வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தில் 0.028 சதவீதம் குறைவாக வழங்கியுள்ள திரு எல்.இராஜேந்திரன்,ஒப்பந்ததாரர்,கம்பம், தேனி மாவட்டம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். |
| | (ந.க.எண். 1136 /2020/இ2) | |
| 9. | கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளி கழிப்பிடமற்ற (Open Defecation Free ) நகரமாக அறிவிக்கப்பட்டு, தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து அடுத்த கட்ட நிலையாக (ODF+ ) சான்று பெறுவதற்கு நகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக நகராட்சி பகுதியில் திறந்த வெளியில் மலம் கழித்தல் நிலை தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது என்ற சுய உறுதிமொழி சான்றிதழுக்கு (Self Decleration ) இந்நகர்மன்றம் அனுமதித்துள்ளது. இதற்கு பொதுமக்கள் இந்நகராட்சிக்கு (ODF+) சான்று பெறுவதற்கும் மற்றும் கம்பம் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free City ) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating ) பெற சுய உறுதி மொழி சான்றிதழுக்கு (Self Declaration ) தொடர்பான பொதுமக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகளை பெறுவதற்கு கீழ்கண்ட நாளிதழில்களில் விளம்பரம் செய்தமைக்கு பட்டியல் வரப்பட்டுள்ளது. எனவே கீழ்கண்ட நாளிதழ்களுக்குரிய தொகையை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | |
| | **1)** தினமணி நாளிதழ் – ரூ.6787/– (ODF+)<br>**2)** தினமலர் நாளிதழ் – ரூ.12,600/–(Three Star Rating) | |
| | அலுவலகக் குறிப்பு :– | **1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)** மேற்படி நிறுவனத்திற்கு தொகை வழங்க வேண்டியுள்ளதால், அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி தொகை வழங்குவதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1201 /2015/எச்1) |
| 10. | நகராட்சி அலுவலகம் மற்றும் காந்திஜி பூங்கா படிப்பகத்திற்கு கொள்முதல் செய்யப்படும் தினசரி நாளிதழ்களை 02.12.2020–இல் பொது ஏலம் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஏலம் கோரப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | |
| | **1)** கே.ராம், கிலோ ஒன்றுக்கு ரூ.8.50<br>**2)** எஸ்.கனகராஜ் கிலோ ஒன்றுக்கு ரூ.10.00 | |
| | அலுவலகக் குறிப்பு :– | வருகைபுரிந்த இரு நபர்களில் திரு எஸ்.கனகராஜ் என்பவர் கிலோ ஒன்றுக்கு ரூ.10/–க்கு உயர்ந்தபட்ச ஏலம் கோரியதை மன்றம் அனுமதிக்கலாம். |

**ஒப்பம்/– திரு. மெ. சரவணகுமார்**
**ஆணையாளர்,**
**கம்பம் நகராட்சி.**

**நாள். 11.12. 2020**
**இடம். கம்பம்**